# அறிவித்தல்

## நீதி அமைச்சு

## 2023ஆம் ஆண்டிற்காக வாகனங்களை பழுதுபார்த்தல் மற்றும் சேர்விஸ் செய்யும் முகமாக வழங்குநர்களைப் பதிவு செய்தல்

நீதி அமைச்சின் வாகனங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் சேர்விஸ் செய்வதற்காக ஒப்பந்தங்களை வழங்கும் முகமாக நீதி அமைச்சில் பதிவு செய்வதற்கு விரும்பும் வழங்குநர்களிடமிருந்து (கொழும்பு மாவட்டம் மற்றும் புறநகர் பிரதேசங்களிலிருந்து) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

www.moj.gov.lk என்ற இணையதளத்தில் அல்லது, நீதி அமைச்சின் வழங்கல்கள் பிரிவின் மூலம் பெற்றுக் கொண்ட மாதிரியின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் இவ் அமைச்சிற்கு அல்லது பிரதேச செயலகத்திற்கு காசாக ரூ. 1000.00 (மீளளிக்கப்படாத) செயலாளர், நீதிமன்ற அமைச்சின் பெயரில் அரச வருமான தலைப்பு 2003-99-00 இற்கு வரவு வைக்குமாறு செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இணைத்து அனுப்புதல் வேண்டும். (இதற்காக காசோலைகள் ஏற்கப்படமாட்டாது என அறிவிக்கிறேன்)

விண்ணப்பங்களை கீழே பெயர் குறிப்பிடப்படும் நபருக்கு 2023.05.26 மு.ப. 11.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம். இல்லையெனில் இவ் அமைச்சின் முதலாம் மாடியில் வழங்கல்கள் பிரிவில் கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி "தலைவர், பெறுகைக் குழு, நீதி அமைச்சு, இல. -19, சங்கராஜ மாவத்த, கொழும்பு-10" ஆகும். குறித்த தினத்திற்கு மற்றும் குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "2023ம் ஆண்டிற்காக வாகனங்களை பழுதுபார்த்தல் மற்றும் சேர்விஸ் செய்வதற்காக வழங்குநர்களைப் பதிவு செய்தல்" என்று குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**நீதி அமைச்சு,**
**இல. 19, சங்கராஜ மாவத்த,**
**கொழும்பு-10**

**மதிப்பீட்டு தகவுத்திறன்**

1. வாகனங்களை பழுது பார்த்தல் மற்றும் சேர்விஸ் செய்தல் பற்றிய குறைந்த பட்சம் 05 அரச நிறுவனங்களிலாவது பதிவு செய்திருத்தல் மற்றும் அதனை உறுதி செய்யும் கடிதங்களை சமர்ப்பித்தல்

2. கராஜ்களை காப்புறுதி செய்திருப்பின் மற்றும் அதனை உறுதி செய்யும் கடிதங்களை சமர்ப்பித்து இருத்தல்

3. பயிற்சிபெற்ற தொழில்நுட்பவியலாளர்கள் சம்பந்தமான தகவல்களை சமர்ப்பித்தல் மற்றும் பரீட்சித்தல்

4. வருமான வரி செலுத்துதல் பற்றிய விபரங்களைப் பரீட்சித்தல்

5. துறைசார் பரிசீலனையின் மதிப்பீடு